உ
ஸ்ரீ முத்துமாரியம்மன் துணை

மாத்தளை (பன்னகாமம்)

# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மாள்



பேரிற் பாடிய

## பதிகம் - அந்தாதி - ஊஞ்சல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

With Best Compliments
frome

# Shanthi
# GOLD HOUSE



# சாந்தி
## கோல்ட் ஹவுஸ்

*22 Crt. genuine gold jewellery*

*All Articles and guaranteed.*

**NO-224B,**
**MAIN STREET,**
**NEGOMBO.**
**TEL- 031-2239996.**
**MOBILE - 0777-812167.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை (பன்னகாமம்)

அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்மாள்

பேரிற் பாடிய

## பதிகம் - அந்தாதி - ஊஞ்சல்

பாடியவர்

உயர்திரு முருகேசபிள்ளை

அவர்கள்

அச்சிட்டோர்

**ஸ்ரீ சக்தி பிரிண்டிங் இண்டஸ்ரீஸ்**

61/1F, பீர்சாய்பு வீதி,

கொழும்பு-12. 011-2438967

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மாத்தளை (பன்னகாமம்)

# ஸ்ரீ முத்துமாரி அம்மாள்

## பேரிற் பதிகம்

### ஆசிரிய விருத்தம்

#### காப்பு

சீரானசெந்நெல்விளைகழனிகளமைந்துலவு
செய்யபங்கேருகங்கள்
செப்புவால்வளையினிதுசூற்கொண்டல்பூகமா
செண்பகமலர்ந்துலவிடப்
பேரானநீரோடைவாவிகளமைந்துநற்பெய்யுமுகி
லினமதென்னப்
பிரபலத்துடனருவிசொரிநறவமணிகளும்
பிரிவிலாதுலவியொளிரும்
நேரானநயமருவுநிகரில்வளமுற்றிடும்
நீள்பன்னகாமமுறையும்
நிறைமுத்துமாரிமேற்பதிகமதியான்பாட
நேசமுற்றருள்புரிகுவாய்
ஊரானகலைகட்குமுணரவொண்ணாதமுத
லோங்காரமாயுறைந்த
உத்தமகுணத்திசிவசத்திநளினத்திலருளுதவுகயமுகதேவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிகம்

திங்களொளியானபரமேஸ்வரிதுரந்தரீசிவகாமிதிரியம்பிகை
சிவகிரியில்வாழ்கின்றவரனுடையகமலத்
திருக்கண்புதைத்தழகுறும்
மங்கைமகமாமாரிசெங்கருடவாகனன்மருகனெனவந்துதித்த
வாலசுப்பிரமணியசிலனைப்பயிலவுயர்மலையரசன்மகளாகியுந்
துங்கமணிபோலவளர்சங்கைபெறுகன்னியின்
தோற்றமதெனத்துலங்கிச்
சோதிபெறுமீசனொருபாகத்தினினிமையுறு
தோற்றமுறுநிமலமாகி
மங்கையெனுஞானியர்கள்தங்கையெனவேதுய்ய
மறைபுகழ்பன்னாகநகர்வாழ்
வாலை சங்கரிகளபமாலைவென்றருள்கனக
வாலசுந்தரியம்மையே 1

சுத்தமுடனாளுமுட்பத்தியாயுன்பதந்துதிப்பவர்க்கருள்விளங்கத்
துன்பவினைவன்பிணிகளண்டாமலோடிடச்
சுகமேவியுள்ளமகிழச்
சத்திநல்லாயிவாநித்தியகல்யாணிசுவிசாலாட்சிலாட்சியென்றுந்
தரணியிற்புகழ்முந்தவரிமருகனெனவந்த
சண்முகனையீன்றதாயே
பத்திசெய்வோர்தங்கள் சித்தமருளாமலேபாலித்துநீகிருபைசெய்
பச்சைமால் தங்கையே மெச்சியுனைநம்பினேன்
பட்சம்வைத்தருள்புரிகுவாய்
வர்த்தகர்கள் புகழவருளுய்த்துதவுமாரியே
மறைபுகழ்பன்னாகநகர்வாழ்
வாலைசங்கரிகளபமாலைவென்றருள்கனக
வாலசுந்தரியம்மையே 2

பூமண்டலந்தனிற்பொறையானதெய்வநீ
புகழ்பெற்றபாண்டிமன்னன்
புத்திரியெனப்பெருமைபெற்றவளுநீயிறை
புரிந்தவளுநீயாகையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமலரடித்துணைபணிந்தேன் மனக்கவலை
மையறுயரவைநீக்கியே
மன்னருளெனக்குதவுவாய்முத்துமாரியே
மறைபுகழநின்றவுமையே
நீமனமிரங்கியெற்கருளுவாயென்றன்னை
நேயமுடனீன்றதாய்போல்
நிகழுமதிசூடிவருபரிபூரணக்கடவுளெஞ்சமகிழ்தேவிபரையே
மாமன்னுமின்னுபுயன்மலர்மன்னுசோலைதவழ்
மாறில்பன்னாகநகர்வாழ்
வாலைசங்கரிகளபமாலை வென்றருள்கனக
வாலசுந்தரியம்மையே 3

இன்னமென்மீதினிற்கிருபைவிழிநோக்கா
திருப்பதுநியாயமோசொல்
லிறைவியேயுன்மனதிரங்குவாய்பலர்களு
மிகழ்ச்சிசெய்வதுநீதியோ
அன்னியனெனாவெனையகற்றிவிடவெண்ணமோ
வறிகிலேனுனதுசிந்தை
அனியாயம்வையாதடுத்தவரைரெட்சணைசெய்
தாளுவதுமுனதுகடமை
உன்னையேதொழுதுகெதிபெறவேணுமென்றுமன
வுறுதிகொண்டிடுபாலனுக்
குண்மையுடன்வந்துனதுபாதங்கொடுத்துநல்லுரைசொல்லி
யடிமைகொள்வாய்
வன்னமணிமடமாதர்துன்னபுடைசூழ்தரும்
மறைபுகழ்பன்னாகநகர்வாழ்
வாலைசங்கரிகளபமாலை வென்றருள்கனக
வாலசுந்தரியம்மையே 4

ஆதபசொருபமாய்வேதமுதலானநீ அருளாதிருந்தையானால்
ஆர்தானுனைத்தெய்வமென்னவிப்புவியதனி
லன்புடன்வணங்குவார்கள்
மாதலத்துக்குநீதெய்வமாம்பொருளுநீமறைகளுங்கூறுகருணை
வாரிதியதானநீவாடுமென்பிணிதீரமனதுவைத்தருள்புரிகுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதலமுலாவுபொருள்சகலமும்முனதுரிமை
பூண்டதின்பலபிரிவதாய்ப்
பொங்குகதிர்திங்களணிசங்கரன்றேவியாம்பூரணிகபாலிசூலி
மாதவமதாகியிவ்வேதனையைநீக்குவாய்
மறைபுகழ்பன்னாகநகர்வாழ்
வாலைசங்கரிகளபமாலை வென்றருள்கனக
வாலசுந்தரியம்மையே 5

சிந்தைமிகநொந்தியானுன்றனைக்கதியென்று
செப்பினேனென்கவலையைத்
தெளிவாயறிந்துமேசிந்தையிற்கொள்ளாத
செயலுமுன்வஞ்சகமதோ
இந்தவகைமாதாபிதாசெய்தபாவமோஎளியேன்செய்பாவமதுவோ
எதுவாயிருந்தாலுமெக்குற்றமாயினும்மின்பமதுவாகவேற்று
உந்தருளினோக்கமுறவைத்துநற்செயலாக்கி
புலகுபுகழினிமைஉதவும்
உம்பர்தொழுகமலமுகைவிம்பத்தெழுந்துமே
லுலகரசுசெய்தவுமையே
வந்தவினைநீக்கியென்மனத்துயர்தவிர்த்தருளு
மறைபுகழ்பன்னாகநகர்வாழ்
வாலைசங்கரிகளபமாலை வென்றருள்கனக
வாலசுந்தரியம்மையே 6

எத்திசையுளோர்களும்புகழ்பெருந்துறையதனி
லேகநாயகியாகியும்
இறைஞ்சுமடியார்வினைகடீர்த்துரெட்சித்துமே
எழிலுலவுகாஞ்சிதன்னில்
முத்திவடிவாகியேமுக்கோணரூபமாய்முதலாகிமுத்திநல்கும்
மோனவடிவாகியேஞானவொளிமேவியேமுற்பராபரையதாகி
வெத்தியூர்தன்னிலேநற்காட்சியினிமையாய்
வேண்டுமடியார்களுக்கு
வெகுவரமளித்திடப்பாகத்தினீங்காமல்
வேண்டுவோர்குறைகண்மாற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகப்பெண்முத்துமாரியெனவந்துமேன்
மறைபுகழ்பன்னாகநகர்வாழ்
வாலைசங்கரிகளபமாலை வென்றருள்கனக
வாலசுந்தரியம்மையே 7

ஆதிமுதலாவைநீசோதிசுயரூபிநீ அண்டபுவனங்களுக்கு
மாதாரமாவைநீமாயாசொரூபிநீ அடல்வீரனன்னைநீயே
நீதிமயமாவைநீவேதவுருவாவைநீநிறைஞானவடிவாவைநீ
நீங்காதறீங்காரவோங்காரவடிவுநீநிரந்தரிதுரந்தரியும்நீ
மேதகையவிண்ணவர்கள்வினைநீக்குதெய்வநீ
வேதவேதாந்தமுதனீ
மிக்கமிடியோர்கள்குறைதீரவேதனதான்யமிகுசெல்வமீபவளுநீ
வாதிகலிலாதடியார்வினைநீக்குதெய்வநீ
மறைபுகழ்பன்னாகநகர்வாழ்
வாலைசங்கரிகளபமாலை வென்றருள்கனக
வாலசுந்தரியம்மையே 8

யோகமயமாவைநீதேசினொளியாவைநீயின்பருள்சகாயியும்நீ
யிறைஞ்சுமடியார்களுக்கிகல்பகையுநீக்கியே
யிகபரமுமுதவுவாய்நீ
ஆகமறையாகமமுமோதுமிதிகாசகுருஅட்டாட்சரப்பொருளுநீ
ஆறுகலைஐந்துகலைதேறியுணர்மெய்ஞ்ஞான
வருளதிககுணகலைநீ
நாகசயனானதிருமாலுநீநளினமலர்நாரணியுநீசங்கரன்
நாட்டியமுநீயாடிமீட்டுமோங்காரியென
நகைமுறுவல்செய்தவளுநீ
வாகனையகுழலளகமாதென்றிறைஞ்சவே
மறைபுகழ்பன்னாகநகர்வாழ்
வாலைசங்கரிகளபமாலை வென்றருள்கனக
வாலசுந்தரியம்மையே 9

தேசுலவுமிப்பதிசெழிக்கவுங்கருணைநீசெய்துனதுமனமகிழவுஞ்
செப்புமிக்கவிதையிற்குற்றம்வராமலே
செயமேன்மைபெற்றுய்யவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசுமதுரம்பொழியுமழகுசித்திரமென்ன
அடியவர்கள்குறையுமாற்றி
அன்புடன்சகலர்க்குமின்புடன்விடையளித்
தணிநிதிகள்பலகுலவவும்
வீசுபுகழெண்டிசாமுகமும்விளங்கவும்மேன்மைசெய்
துய்யும்வகைசெய்
வேண்டிவருவோர்களுக்கில்லையென்னாமலே
மிகுசொன்னம்வளரவருள்செய்
மாசிலாமதிபோலநேசம்வைத்தாள்துய்ய
மறைபுகழ்பன்னாகநகர்வாழ்
வாலைசங்கரிகளபமாலை வென்றருள்கனக
வாலசுந்தரியம்மையே 10

## வாழி

ஆனைமுகனும்வாழ்க அவி அரன்குமரனுட
னம்மையிருவோரும்வாழ்க
அகிலாண்டகோடியுமைதிரிசூலிகவுமாரி
அம்மை அருள்நாளும்வாழ்க
சேனைபெறுமரசர்செங்கோல்வாழ்கமுகில்வாழ்க
செய்யநற்கோவும்வாழ்க
திரளானபலசெல்வமினிதுபெற்றிப்பதித்திகழ்
கவித்தொண்டர்வாழ்க
மானமுறுமங்கையர்கள்கற்புமிந்நகருளோர்
மற்றுமுள்ளோரும்வாழ்க
வாகுவலயம்பெற்றவீரமுறுகணநாதர்மகிழ்தருங்காரிவாழ்க
சோனைமுகில்போன்முத்துமாரியருளும்வாழ்க
துய்யசிவதொண்டர்வாழ்க
சொல்லரியவொளியுலவிநன்மைபெற்றித்தலச்
சுடர்நிறைவுபெறவாழ்கவே.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

முத்துமாரியம்மை பேரிற் பாடிய

# வினைவிடந்தாதி

## காப்பு

சீரானகங்கைமதியணிசேகரர்சிந்துரமாய்ப்
பேரானமாதுபிடியைமணந்துபிறங்கெழில்சேர்
நேராம்பிரணவத்தோற்றத்துதவுநெறிமருப்புக்
காரானைமாமுகன்பாதமெப்போதுங்கதிதருமே.

## நூல்

கதியாகுஞ்செய்யகலைமகள்வாணிகமலையிவர்
துதியாகும்வாழ்வுதுலங்கிடநல்குஞ்சுருதிமறைப்
பதியாகும்பன்னகமப்பதிமேவும்பகவதிதன்
துதியாகுந்தாமரைத்தாள்களெப்போதுந்துணைதருமே. 1

தருமாதனங்கல்விசாந்தம்பொறுமைதயவுநட்பு
மருவாகைவெற்றிபுகழ்சொல்லுறுதிவருங்கணிதந்
திருமாதுநோக்கந்தியாகமியோகஞ்சிறந்திலங்க
வருளாகிவந்தென்னையாதரித்தன்புடனாளுவையே 2

ஆள்வாயருள்சுற்றமானபுதல்வர்ககங்குளிரத்
தாள்வாய்விடாமற்றகுமுணவீந்துதகுகலச
வாள்வாகிமேன்மைமருவுற்றுபரமகிழ்வுசெய்தே
யாள்வாயிடர்தவிர்த்தாண்டுநின்றாளருளன்னையரே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையுமாகியருட்பால்சுரந்துநல்லாரணமாய்த்
தன்னகமாகிச்சரமசரங்கடழைத்துலக
மென்னவுமாகிநல்வீடே கொடுத்தருளின்பவர
நன்னயநாரணிமாரியென் றேசொலுநான்மறையே. 4

மறையேதிரிபுரைவாலைபுவனைவராகியெனத்
துறைசேர்வணிகன்மகளாய்ப்பரையெனுந்தோற்றமதாய்க்
கறைசேர்விடமணிகண்டனுக்கிங்கிதக்காட்சிகொடுத்
திறையாகிமாயன்றுணையாயினாயருளீன்றவளே. 5

ஈன்றாள்புதல்வர்க்கிரங்குந்தகைமையெனப்பணிவோர்
சான்றாகியேதுணைதானாகியேயருட்டாருவதாய்
வான்றோய்பறவைக்கிடர்நீக்கியின்சுவைமன்றநல்கி
யூன்றாதபேரின்பத்தாறாம்பரையெனுமுத்தமியே. 6

உத்தமியாகியுலகம்விரியவுமையெனுநற்
பத்தினியாகிப்பகவதியாகிப்பகலிரவாம்
வித்தகியாகிவிமலையெனப்பெயர்மேவிவளர்
சத்தியெனுஞ்சிவசங்கரிநீநந்தயாபரியே 7

பரியாகியேயனல்வேதச்சுடரிற்பரிந்துகலை
விரிவாகியேதவமேவுஞ்சனகர்விரும்புசவுந்
தரியாகியோகதுரந்தரிசுந்தரிதாயெனநின்
றுரியார்மனத்திலுறைவாய்பன்னாகமுறைபவளே 8

உறைபவளேகனகச்சபையாமன்பருள்ளத்தினி
னிறைபவளேயிடர்நீக்கிப்பரிசுநிதமுதவிப்
பிறைசேர்சடையவன்பாகத்தினிலமர்பேதையென
வறைவாரருட்சொல்லையானந்தமாகியணிபவளே. 9

அணியானவஞ்சகர்நெஞ்சப்புலனையடக்கியநற்
கணியாகிஞானச்சுடராகியேமயல்காட்டுங்கய
லணியார்விழியர்க்கருளாகுமின்பவமிர்தசுவை
தணியாதுநல்குமருளாய்வளர்ந்திடுந்தானவளே 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானவளேயருளானவர்தேடித்தயங்கமுதம்
வானவர்க்கீந்துமகிழ்வாகத்தானவர்வாட்டமுறப்
போனவளேசுரர்போதந்தெவிட்டப்புகழுடனின்
றானவளே அருளையனையீன்றிடுமானந்தியே. 11

ஆனந்திவேதி அருளாயி அம்பலவையர்மகிழ்
தானந்திசோதிசருவதிகம்பரிசங்கரியென்
றானந்தமாகியவாரணர்சொல்லுக்கடங்கிவெளி
ஞானந்தரும்புகழ்நன்முகமாகியநான்மயிலே. 12

மயில்போலுஞ்சாயல்வடிவாகியன்பர்மனங்கசிய
வயில்போல்விழிநயங்காட்டிடுமாயையநேகவிதக்
குயிலாகி ஆடல்குலாவுவைவேற்குகக்கொற்றவனை
மயில்மேல்வளர்த்தவளேதில்லையாளும்மனோன்மணியே 13

மணியேகனகச்சுடரேதரளம்வயங்குமிசை
யணியேயணியுமதுரம்பொழியருளார்கவிஞர்
துணிவாகும்பாடல்சுவையாகுமாலைச்சுரதவிசை
யணியாயணிந்துபலமணியிந்திடுமம்பிகையே. 14

அம்பிகையாகியொரைந்துகரனையனவரதத்
தும்பிமுகத்திறையோனையருளுடன்றோற்றிச்சுரர்
வெம்பிடவாட்டுகயமாமுகனை வினையில்வென்று
கம்பிதமாகவதைத்துச்சுரர்தமைக்காத்தவளே. 15

காத்தவளேகலையாகிப்பஞ்சாட்சரக்காரணமாய்
மூத்தவளாகிமுதல்வியுமாகிமுகுந்தனெனப்
பார்த்திபரானகுலமென்னுஞ்சேயர்க்குப்பால்சுரந்திங்
கேத்திடுவார்களையீடேற்றிவைக்குமிளஞ்சுடரே. 16

சுடராகிமூவர்தந்தோற்றமுமாகிச்சுயம்புநிறை
படராகுமுத்தொழிற்செய்கையுமாகிப்பராபரையாய்
நடராசசேகரனாய்நின்றுமுத்திநயமுதவி
யிடர்தீர்பலவரமீந்திடுந்தோற்றத்தினியவளே. 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியவளாகியிடர்பகைதுன்பமிழுக்குலைவு
சனிதோஷம்பொல்லாங்குசத்துருவாதைசகலமிருத்
தனியாயப்பாவிகள்வஞ்சனைதீமையழுக்கதெல்லா
மினிதாகநீக்கியெழில்யோகந்தந்தருள்குவையே. 18

ஈகுவளன்னையுதரத்திலுற்பவித்தின்றிடுமிவ்
வாகுலமிக்கதமியேனைக்காக்கவகங்கசிந்து
மாகுலமேன்மைகிளைசுற்றஞ்செல்வமகிழ்வுபுக
ழீகுவையேகுலத்தெம்பெருமாட்டியிடர்தவிர்த்தே. 19

தவித்தோர்க்கிரங்கித்தனையாதரிக்கத்தருங்கனகங்
குவித்தேகுலம்வலர்த்தும்பர்தொழவுங்குடைகவரி
சவித்தோர்கள்தண்டிகைமுன்னாம்வரிசைதகைமைபெறப்
புவிக்கிறைசுந்தரமாகஓங்காரத்துறைபவளே. 20

பவளத்திகழ்மடமாதர்க்குநற்சுகம்பாலித்திடக்
குவளைக்கண்மங்கையர்கூட்டமுற்றில்லிற்குலாவும்பொற்
றவளத்தரளமணிப்பீடமுற்றன்பர்தக்கமனந்
துவளவளர்த்தருட்டோற்றமதாகியசுந்தரியே. 21

சுந்தரிகன்னிசிவகாமிசூலினிதூயசக
தந்தரிசாமளைதற்பரிகொற்றவிதாண்டவிதுன்
பந்தரியாதருள்கோரிவிமலைபயோதரிசங்
கந்தரிகாரணிகாலனைக்காயுங்கமலினியே. 22

கமலினியேதிறசூலக்கரத்திகவுரியம்மையை
யமலினிநன்றருள்பாசாங்குசத்திறலம்பிகையே
தமரிமையோர்தொழும்வீரிதிரிசகதாரணியுத்
தமகுணியாகித்தராதலம்போற்றிடுந்தற்பரையே. 23

தற்பரைசக்கரந்தாங்குந்தடக்கைத்தடாரியென
விற்புரிவோர்க்கும்வினைநீக்கிவிட்ருள்வித்தகிநற்
கற்பரியாக்கிக்களித்துலகத்தொளிகாட்டியன்பாய்ப்
பொற்புரியீந்தவளேபுவனேஸ்வரிப்புன்னகையே. 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகைகாட்டிப்புதல்வற்குமுன்புகலருளி
னன்னயங்காட்டிநயமேன்மைமாநிதிநன்றுதவு
மன்னமுஞ்சொன்னமுமன்புமருளுமளித்தருளிச்
சின்னகைகாட்டுறுஞ்சிற்பரையேவண்சிறப்புறவே. 25

உறவானசுற்றமுந்தோற்றமுந்தேசுமுறுதுணையும்
பிறவானசேர்க்கைபிதாவன்னைநட்புபிறங்குதவந்
துறவானமாமன்சுரிகுழலார்துணைதாயதங்கை
மறைவானமாமியுநீயேயெனுற்றமதித்துணையே. 26

துணைகளுமந்தத்துணையால்வருஞ்சுகசோபனமு
மணைகளும்யோகமுமன்புமழகுநல்லாரமுது
மிணைகளுமானவளியானநேரத்திலிகையுறு
மணைகளுநீயென்றனேசன்சுதனுமமைச்சனுமே. 27

அமைச்சியற்சொல்லுறுதிக்கிசைவானநல்லாரணமு
மிமைக்குமுன்றோற்றமெழில்சேர்கருணைதன்னேவலுக்காங்
கமைச்சலுற்றோருங்களிமயல்தீர்த்திடுங்காரணரும்
உமைத்துணைகொண்டபலனாகவிங்கருளுத்தமியே. 28

உத்தமியேசுடரோங்காரவட்டத்திலுற்பவமாய்ச்
சித்தமிசையுறைறீங்காரமாகித்திகழ்கலைக
ளத்தமெனப்பொலிந்தட்டாட்சரப்பொருளாகிச்சிவன்
பத்தினியாகிப்பதுமாசனத்துறைபார்வதியே. 29

பார்வதியாகிச்சகலகலையும்பரிந்துறைந்து
சீர்வதியானசெகமாயுந்தோற்றமுஞ்செய்கையுமா
யூர்வதியாகியுமுள்ளும்புறமுமொன்றாயிருந்து
தார்வதியாகிச்சராசரையாய்ப்புவிதாங்குவளே. 30

தாங்கிடுபாலர்க்குச்சாரும்வினைகடவிர்த்துமனத்
தூங்கலுநீக்கிச்சுகவாழ்வுதவிச்சுருதியிசை
பாங்குடன்பாடவும்பார்வைபுற்றேயருட்பாவலனாய்
நீங்காதுனதருணேசமுங்காட்டிநிலைதருமே. 31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவாய்வளரச்சகலகலையுஞ்சராசரமா
யுருவானகாட்சியுமுள்ளறிவாகியுரைகளுநன்
மருவாயுமீயுமதுவாயுமாயைபலவிரிவாய்த்
துருவாயமைந்தசுரிகுழலாகியதோற்றமுமே. 32

தோற்றிடுஞ்சொல்லுமச்சொல்லிலமையுந்தொழிலுமனத்
தாற்றலுமானகுணமுங்குணத்தினருள்சுரக்கு
மாற்றலுமாகியகங்காரமாகியனேகவித
வூற்றமுமாகியுயிர்க்குயிராயுள்ளுறைபவளே. 33

வளையினமாயும்வரிக்குலமாயும்வனஞ்செறியு
முளையினமாயுமுலாக்கேழலாயுமுடும்புமரை
மளைபோன்மதக்கரியாயும்வருந்துட்டவஞ்சனையை
யிளையாவெதிரணுகாதென்முன்னேவந்திரட்சியுமே. 34

இரட்சியுமென்னையிருதாமரைப்பதமென்னகமே
தாக்கருதும்வினைசஞ்சலநீக்குஞ்சதாசிவசங்
கரற்குமுன்னாகியகாரணிஐயுங்கிலியுஞ்சௌவும்
பரப்பொருளவ்வுங்கிலியாகமுன்வரும்பாராதியே. 35

பாராதிபூதத்தொடராகிலேதம்படர்கொடிக்கு
வேராதியாகிவிளக்கனல்போலவிரியுஞ்சகக்
காராதியானவினைநீக்கிவஞ்சக்கசடர்களைத்
தூரோடைசங்கரித்துய்யுங்கருணைசொரியுமன்பே. 36

அன்பானதொண்டர்மனத்தூடிருந்தின்னருள்பலவாய்த்
தன்பானல்விண்ணெழுதாரகைபோற்சகநாடிடவு
மன்போற்சசியின்கிரணத்துலவுமறைமுதலே
மின்போல்விளங்கிவிளைவெணக்கீபவிரும்புமன்னே. 37

மன்னாகிமன்னர்மணிமுடிமீதின்வருங்கிரணந்
தன்னோடளாவிச்சகலகருணைதரும்புனித
மின்னாய்மறையவர்வேதவித்தாகிவிழுப்பொருளாம்
பொன்னாகியேயண்டபூலோகந்தன்னைப்புரப்பவளே. 38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரம்பொடியாக்கியபுங்கவனுக்குப்புராதனியாய்
வரம்பலவீயமறையாம்பிரணவமன்னிமுக்கண்
திரம்பெறவீந்துசெகத்தோற்குத்தேசிகச்செல்வநல்கி
யுரந்தன்னைக்காட்டிடவுத்தமியாகியுதித்தவளே. 39

உதித்திடுந்தக்கனுடலம்பொடிபடவுற்பவித்து
விதித்திடுவேதன்வெருவரப்பத்திரையாகியுமண்
துதித்திடவீரனையீன்றுஞ்சுடர்க்கொழுந்தாகியும்விண்
மதித்திடவட்டத்தின்மாதவமாகிவதிந்தவளே. 40

வதியாமலேகடல்சூழ்மாநிலத்தின்மகிமையுள்ளோர்
துதியாகநாலிதழ்நாற்கோணமாகியுஞ்சொல்லரிய
விதியானநான்முகன்மேலாமகந்தையைவிட்டிவரச்
சுதியாமுடுவலுயர்தோற்றமாகியசுந்தரியே. 41

சுந்தரிகங்கைசுமையாகத்தோன்றிடுஞ்சோதியனல்
வந்தசலந்தான்மாநகர்மேவிவருங்கலக
முந்தவிடாமன்முகில்போலத்தோன்றிமுறுவலரன்
றந்திடுசக்கரந்தாங்கியவித்தகைத்தாடகையே. 42

தாடகையானவண்முன்வரும்ராகவன்றானெனமுன்
பாடல்புரியுங்கயிலையைத்தாங்கிடும்பாதகனோ
டீடமராட்சதர்மாயையைநீக்கியினவிபுதர்
நாடவருள்புரிநாமகள்போலநடிப்பவளே. 43

நடிப்பவள்செங்கைச்சிலையைமுன்றாங்கியுநாரணனைப்
படித்தலங்காக்கப்பணிசெய்தும்பார்மகள்தானெனவும்
துடிக்குமரவெனுஞ்சொன்மூடநீசரைச்சுட்டறுத்துப்
பொடிப்பொடியாக்கிப்புலவரைத்தாங்கியபொற்கொடியே. 44

கொடிபோலிடைமுகிற்கூந்தன்முகமலர்க்கோகனதம்
பிடிபோல்நடையுறும்பெண்ணாகிமாயனுடன்பிறந்து
வடிவாயியென்றுமவுனியர்முன்புவழக்குரைத்தாங்
கடியாரைக்காத்திடுமானந்தியான அரம்பையரே. 45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரம்பையர்கூட்டமுதல்வனுக்காகநல்லாரணமா
யுரம்படக்காட்சியுதவிப்பலபொருளுச்சிதமாய்
விரம்பமுன்னீந்துவிசயம்பொருந்தநன்மேன்மைசெய்து
வரம்பலநல்கிமகிழ்வாயிருக்குமதியன்னமே. 46

அன்னம்பயிலக்கமலமலர்த்துநல்லாதவனைச்
சின்னஞ்சிறியமணியெனவேசிரமீதணிந்த
பொன்னம்பலவன்புகலுமறைக்கொடிப்பூரணியாய்த்
தன்னந்தனியேசகலமுந்தாங்குஞ்சாராசரையே. 47

சரையாகவிண்ணெனுமாடையிற்றாரகைசேர்மணியைக்
கரையாதழுத்தியகாட்சிபீதாம்பரங்காதலுட
னரைமீதழுத்தியடர்மதிதன்னையணிபதக்க
நிரையாயணிந்தநிரந்தரியாகியநேரிழையே. 48

நேரிளையாற்குமனம்போற்கிருபைநிதம்வழங்கிப்
பேரிளமைக்கும்பிணிநீக்கிமாயைப்பிணக்கறுத்தான்
டேரிளவாகையிடம்பொருளின்பமினிதுதவுங்
காரிளையென்னுங்கருணாகரத்திகமலினியே. 49

கமலினிகையினிற்சூலம்மழுச்சங்குசக்கரம்வா
ளமலினியங்குசபாசாங்குசங்கையணிந்துகதை
விமலினிவேல்வில்லெழுவாயுதம்பிண்டிபாலமுதற்
றமலினிதாகியணிந்தாடல்செய்திடுமானந்தியே. 50

ஆனந்தியாகியறுமாமுகனையருளுடனே
தானந்திபாலுருவாகுந்தனையரைத்தந்துகராக்
கீனந்தருகொடுந்தானவர்கூட்டத்தையீடழியத்
தானந்தஞ்செய்திடவேசத்தியாகித்தழைத்தவளே. 51

தழைத்திடவேகின்னரர்பதிதன்மகடாபரமென்
றழைத்திடவந்தகலாசுரன்றன்னையடலுடன்சாய்த்
திழைத்திடுமாதினையேந்தலுக்கேமணத்தீந்துசெல்வங்
குழைத்திடக்காட்டுங்குமரிபயங்கரிகொற்றவியே. 52



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொற்றமுறுமுசுகுந்தன்றனக்குக்குவலபத்தி
னற்றவத்தானரர்போற்றிடநாரணியாகிமகிழ்
கற்றவர்தங்கள்மனத்தூடிருந்துகவலொழித்துச்
சொற்றவறாதமொழியாகித்தோற்றுஞ்சுடர்ப்பொறியே. 53

பொறியாகுமாறிற்புலன்களுமைந்துபுகவிடுத்து
நெறியோடிருக்குந்தவநேசர்பக்கநிறைகுணமா
யறிவாகுஞானத்தகவீடிருந்தின்னருள்பலவாய்க்
குறியாகித்தோற்றிக்குலாவிடுங்கோமளக்குஞ்சரியே. 54

குஞ்சரிவஞ்சர்குலம்வேரறுத்துக்குவலயத்திற்
றஞ்சமெனத்தொழுவோர்வினைநீக்கித்தகைமையுடன்
கஞ்சமலர்த்திருமேன்மையுமீந்துகளிப்புடனே
யஞ்சலென்றாதரிக்கும்மகமாயியென்றானவளே. 55

ஆனவளாயியருட்கமலாயியடலசுரர்
தானவளாயிச்சரையாகிச்சாம்பவிசம்பவிவிம்
பானவளாயிவிசாலாட்சிவீரிவிமலைகுறி
வானவிகோரிவயிரவிதுங்கவிசூலினியே. 56

சூலினிபத்திரைசூதகிவித்தகிதுங்கவட
வாலினிமாதவிமாதங்கிமாயாமருளிகஞ்ச
மேலினிதாகும்விகற்பவதிகருணாகரத்தி
பாலினிதாயருள்காமசவுந்தரிபஞ்சனியே. 57

பஞ்சனியேகபகவதியச்சுதைபாந்தளணி
வஞ்சகிகாளிவரமருடற்பரைவானவர்க
டஞ்சமதாகித்தனியரசாண்டதடாரிவிற்கைப்
பஞ்சவர்சத்திகலியாணியானபதுமனையே. 58

மனைபோலருள்பொழிந்தின்பத்தையீயமனமகிழ்வா
யினையாய்பலவுருக்காட்டியுந்தோற்றத்தினிதமர்ந்து
தளைவாய்வருமன்பர்தாபத்தைநீக்கித்தருங்கனகம்
விளைவாகவீயவந்தாய்சகத்தோற்றம்வியப்புறவே. 59



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியப்பாயெவருமதிக்கவொண்ணாதவினைதவிர்த்து
நயப்பானஞானமெனல்லமிர்தீந்துநற்காட்சியுடன்
கயப்பானவருங்கனிவானவரவர்காதலித்த
நியப்பாமனதின்படிவரமீந்திடுநின்மலியே. 60

நின்மலிநேசகுமரிநிட்டூரிநிமாலினிய
வன்மலிபேச்சிவடுகிகோமாரிவயமிகுத்த
நன்மலியும்முத்துமாரிசுமாரிநயகச்சணி
பன்மணியாகப்பலபேர்தரித்திடும்பாதத்தியே. 61

பாதகனாகுமவுணன்படையும்பலவஞ்சகச்
சூதகராகுந்துணைவர்தமையுந்துகள்படுத்தி
மாதவத்தோர்க்குமவுனியெனவந்துவாய்மையுடன்
றோதகமாகிபகன்னியின்தோற்றச்சுடர்க்கொழுந்தே. 62

கொழுந்தாகுமூலங்குளிர்வாயுபத்துக்குலைகரப்பன்
எழுந்திடுமேகமிளைப்போடெரிவுடனுட்டணமும்
அழுந்தாதசதியரையாப்புடனண்டவாய்வுமுதல்
எழுந்தவினைகளெல்லாந்தவிர்த்தாள்சித்துறுமெழிலே. 63

எழிலானதோற்றத்தினியவளாகியிகற்பகைகள்
சுழியானவஞ்சகர்சூதும்பொறாமையுந்துட்டர்செயும்
பழியானசெய்கைபராமுகமும்மற்றும்பாவவினை
வழியாகத்தீர்த்துமகிழ்செய்மரகதமாவல்லியே. 64

வல்லாளனாகியவிந்திரனுக்குவருவினையாங்
கல்லாசுரனுங்கடினமுறுத்தும்வலாசுரனும்
வில்லான்முசுகுந்தன்றன்னால்விலக்கிநயநிதிக
ளெல்லாம்வழங்குமிரத்தினவல்லியென்றுற்றவளே 65

உற்றவண்மாணிக்கவல்லியெனநன்றுலகுபுகழ்
கொற்றநல்வெற்றிகுலவிடவேமகிழ்வாகவரு
ணற்றவமாகியநான்மறைமுன்புநடனத்துடன்
சொற்றுநடித்தவளேதோற்றமாகியசுந்தரியே. 66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமாகியசெண்பகவல்லியெனத்துதிப்போர்க்
கந்தரநீக்கியருண்மேன்மையீந்தன்பரானவரைச்
சந்ததமுந்துணையாகவளர்த்துச்சகலகலை
வந்துமுன்னீபவளேமயிலோனைவளர்த்தவளே. 67

வளர்த்தவள்வானவர்தங்களுக்கென்றுமனமகிழ
விளைப்புமுதிருநரைதிரைநீக்கியெல்லாப்புகழுந்
தளைத்திடுதேகமழகியவ்வன்னமுந்தானென்றைக்குங்
கிளைத்திடவீயுமகிலாண்டவல்லியென்றானவளே. 68

ஆனவளாகிமகிடாசுரனையடலுடனே
தானவளாகிச்சதிசெய்துதொண்டர்தனக்கருளி
மீனவனுக்கும்விமலையெனவந்துமேதினியி
னானவனாகப்பலதோற்றமாகநடந்தவளே. 69

நடந்தனன்மேதினியுய்யப்பலதலநாடறிபல்
லிடங்களின்மேவியினிதாகவீற்றிருந்தெங்குநிறைந்
திடம்பெறநல்லிடையேந்தலெனப்பொழிந்தேவல்பில்லி
தடம்படுவஞ்சனைதன்னையுநீக்கித்தகைமைசெய்யே. 70

செய்யானுந்தேளுஞ்சிலந்தியரவுசெறிஞமலி
பையானபாந்தள்பகைஞரெனப்பொலிபார்விலங்குந்
தொய்வானவெண்குகரிமுதலானவுஞ்சொல்லரிய
பொய்யாம்வினைகளுமென்முன்வராமலருள்புரியே. 71

புரிவாய்வினையெனும்பொல்லாங்குமாயைபுகலுந்திட்டி
யெரிவாய்நரகமெதிர்த்துவருஞ்சத்திராதிபகை
யரிவாய்கைவாள்கொண்டரசர்பகையுமகந்தைகளுந்
தெரிவாயுன்னேவல்செய்வார்க்கிவைநீக்குசிறப்புடனே. 72

சிறப்புடன்றன்னையடுத்தவருக்குந்தெளிவுடைய
வறப்பொருண்மேவிடுமன்பருக்கும்மிகுமாகமங்க
டிறப்படுவோருக்குஞ்சீரானமேன்மையுறுஞ்செல்வர்க்கு
முறப்புகழ்மேவும்படியுன்னருள்செய்யுமையவளே. 73



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையவளாகியுலகஞ்சிறக்கஉகாரமென்னும்
அமையுமகாரமிகாரம்வகாரமும்அய்யொகரங்
கமையுஞ்சிகாரம்நகாரமகாரமிலிகிலியுஞ்
சமையலறிவெனுந்தத்துவமாகித்தணந்தவளே. 74

தணந்தவளோமெனுமாமெனும்ஹ்ளம்அவ்வுஞ்சவ்வுமுவ்வுந்
தணந்தவளம்மெனுமும்மெனும்வம்மெனும்சம்மெனவுந்
தணந்தவள்வங்கென்றுஞ்சிங்கென்றுஞ்சார்ந்துதனியகரந்
தணந்துபலவிரிவாம்மறையாமுரைதந்தவளே. 75

தந்தவளேகிலியாகிச்சிலியெனுந்தாபரமாய்
வந்துமணியெனவேநவசத்தியைமாநிலத்தின்
முந்தவருளியுருவாகிறீயெனும்வட்டத்துறைந்
தந்தமிலாடனவகோணசத்தியென்றானவளே. 76

ஆனவளேநவகண்டமதாகவருளுலகந்
தானதுவாய்ச்சகமீரேழுமாகித்தகைமையுற
மேனலமேபெறமேலோர்க்குநன்மைமிகவுதவி
யீனமில்லாமலினிதின்பமுத்தியுமீபவளே. 77

வளைகாட்டுந்தாலமதாகியுமற்றும்மரமுதலா
மிளைகாட்டுந்தாபரமாகியுமெங்கும்பிரிவிலதாய்த்
தளைகாட்டியின்பந்தனைக்காட்டியெங்குந்தமையடிமை
களைகாட்டியன்பரைக்காத்திரட்சிக்குங்கருணையுமே. 78

கருணையும்பஞ்சகலையாகியுற்பவக்காரணமா
யொருமையுமாகியுலாவுங்கணங்களுணவர்வரிய
விருமையுமாகியுமேகாட்சரத்திலினிதமர்ந்திங்
கருளுடனேபலநூல்சொல்லும்ராசதநாமகளே. 79

நாமகள்கஞ்சமலர்வதிநான்முகனாடரிய
தாமமுறுஞ்சிவசோதியையேமத்துடனிகள்வாய்
வாமமுறுங்குறைமாற்றமகிணபதியெனவுந்
தாமதுவாகியசங்கரன்றோற்றத்தமர்பவளே. 80



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமராகியேபன்னகாமம்புகழவுஞ்சாருமன்பும்
உமராகவேநம்புமுண்மையுள்ளோர்க்குமுவமைமிக்காங்
கமராய்வதியவுங்காட்சிகொடுத்துக்கருணைசெய்து
குமரானவர்க்குமணமீயுமேன்மைக்குணவதியே. 81

குணவதியாகிக்குவலயமீதிற்குலம்விளங்கக்
கணபதியாய்விடுங்காரணன்றன்னைக்கவலையற்றுப்
பணவதியாகவமைத்துப்பஞ்சாட்சரப்பாடகத்தை
மணவதியாயணிந்தேமனைமீதில்வதிந்தவளே. 82

வதிந்தேகலைகள்வளர்க்கவென்றேபலமாயைதன்னை
யதிந்தேயரன்முன்னரஞ்செழுத்தாலகக்காட்சிபெற
விதிந்தேனருவிமிகவரகஞானவிதையெனவே
பதிந்தேபகலிரவாகியதோற்றப்பசுங்கிளியே. 83

கிளிபோலும்பேச்சுமயில்போலுஞ்சாயல்கிளர்வடிவந்
தளிர்போலுமேனிதயங்காமனாளுந்தனுகரண
வளியாய்நடத்திவளம்பலவீந்துமகிழ்ச்சிசெய்து
பளியாய்பராமுகமாகாமலீயுங்கதிபவுஷே. 84

பவுஷாகுமன்பர்பரிவேபரிவின்பகங்குணமாய்க்
கவுஷாயமோனகெதிகாட்டிக்காரணமாய்விளங்க
அபிஷேகநாதற்ககமாகியேகமலாலயத்திற்
பவிஷாய்வதிபவளேபங்கயாசனம்பார்வையுற்றே. 85

பார்வையுற்றேபஞ்சபூதியமாகியும்பஞ்சகுண
நீர்மையுற்றேகலைதானாகியேநிறநேர்மைதாய்ச்
சேர்வையுற்றேசெகஞ்சேகரமாயணிசெக்கர்பக்க
லார்வமுற்றேயன்பர்க்கன்னையர்போல்வருமானந்தியே. 86

ஆனந்தியெங்களருட்செல்விநல்லியருட்கமலி
வானந்தமாகிமறையைவளர்க்குமருவுங்கட்சி
தானந்தமீதிற்றருப்போலுறைந்துதருபுகழே
யீனந்தமில்லாதெழில்காட்டியாளுமிறைசத்தியே. 87



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியுநீசிவமானதுநீதழலானதுநீ
நித்தியமாயருணிட்டையுநீநிலைநிட்களநீ
பத்தியுநீபகலானதுநீபந்தமானதுநீ
சித்தியுநீதெய்வமுத்தியுமாகித்தெரிபவளே. 88

தெரியும்பொருளுந்தெரியாப்பொருளுந்தெளிந்தவர்க்கு
விரியவுரைக்கும்விமலையுமாகிவிடவரிய
வரியுமயனுமரனாமுருத்திரனானவனுந்
துரியமகேசுரமூர்த்தியுமாகுந்துரியமுமே. 89

துரிபவளேகாம்பரிவதனந்தரிதுங்கசுடர்
தரிகனகந்தரியாதரிவேதரிதானவர்கள்
திரிபுரசுந்தரிதேவித்ரியம்பிகைசெய்யமணி
பரிபுரபங்கயபாதமுந்தந்துபணியருளே. 90

பணிபருள்கொண்டநின்பாதுகையானவிப்பாலகன்றன்
றுணிவுறுசொல்லில்வருங்குற்றஞ்சொற்குற்றந்தூய்மையுடன்
பணிபெறவேசித்திநன்குறவேசெய்துபாங்குடனே
யணிபெறவேயருளந்தரியாமியென்றானவளே. 91

ஆனவளேசகடாசுரன்றன்னையடலுடன்வென்
றானவளேகிரவுஞ்சன்கயமுகன்றாருகனாந்
தானவர்தம்மையுஞ்சங்கரன்போலத்தகித்துமகிழ்
வானவர்தம்மையுமஞ்சாதிருத்திமகிழ்பவளே. 92

மகிழுந்தனையர்க்குமாதாவைப்போலவரமருளித்
திகழுந்தினகரன்போலருட்சோதிதெளிவுபெற
விகழும்மருவலர்செய்கையுந்தீர்த்திட்டிடர்தணித்துப்
புகழுங்கருணைபொருந்தக்கிருபைபுரிகுவையே. 93

புரிகுவைபோற்றியெனத்துதிப்போர்மனம்பொங்கவிம்மி
யரியெனவோதுமவனுக்குஞானமதுவளரப்
பரிபுரமானபதங்காட்டும்வண்ணமிகமலரத்
தெரிவுறவந்துசெகத்தோற்றமானசெழுஞ்சுடரே. 94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடராய்மதியெனுஞ்சொல்விரிவாகியதோற்றமென
வடரான ஆறுமுகனையுதவியருமையுட
னிடர்தீரவெங்குநிராமயமாகவெழுந்தருளிக்
கடல்சூழுலகினிற்காரணமானகயற்கண்ணியே. 95

கண்ணியெனும்மலர்ச்சோலைகண்மேவுங்கனதரும
மண்ணினின்மேன்மைமருவும்பன்னாகமதிக்கவொளித்
தண்ணளியானகிருபைசொரியுந்தவமுடைய
பெண்ணமுதேசிவகாமியெனப்பெயர்பெற்றவளே. 96

பெற்றவள்பிள்ளையருமையறிவள்பெறாதவளே
நற்றவமானதறியாள்கிருபைசெய்நாரணியே
கற்றதுநோற்றதுங்காதலித்தேத்திக்களிமயக்க
முற்றதுமானதனயனுக்கேயுண்மையோதிடுமே. 97

ஓதிடும்பாவிலுரைத்தவெல்லாமென்றனுத்தமியே
வேதமொழியெனுநூலாகிமேன்மைவிளங்கிட வுஞ்
சாதனமானதனயர்பவிஷ ுதகைபெறவு
நீதியுடன்மனப்பேதமில்லாமனிதந்தருகே. 98

தருவாய்மனதின்படியெண்ணுங்காரணந்தான்மனதா
யருமைபெறவுண்மையோதியவார்த்தைக்குகந்தருளி
யிருமையுமோட்சமும்மேல்யோகமுந்தந்தெழிலுடம்பை
யருமையொடேநிதம் ஆண்டருள்வாயருளாரணியே. 99

ஆரணியேபன்னகாமத்தின்மேவிடுமன்பர்மனப்
பூரணியானபுரிகுழலேபுவனந்தழைக்க
நீரணியாகவருவோர்குறைகணிதமகற்றிச்
சீரணிசித்தியுமுத்தியுமீசெகத்தோர்களுக்கே. 100



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரார்த்தனை வாழி

நூறானகோவைநுவல்கின்றபாவைநுதலணங்கே
பேறானமாலையெனவேபுனைந்துபிறங்குவினை
நீறாகநீறிநிலைநேர்மையின்பம்புகழ்நிதியம்
வாறாகவீந்துமனமகிழ்ந்தருள்வாழியவே. 101

வாளியதாகவெந்நாளுநீராடியும்மாநிலத்திற்
றூளிகணீங்கக்கருதியுடன்றிருநீறணிந்து
நாளிலுமேதலமுப்போதுமேபிரதட்சணமா
யூளியஞ்செய்திடுவோருக்குமேன்மையுதவுகவே. 102

உதவியதாகவிருக்குமித்தேகமதுள்ளவும்
விதனமில்லாமன்மெலியாமனோய்நலியாமற்றவ
விதனமிராமல்விசனஞ்சாராமலுமேதினியிற்
பதனமதாக்கிப்பதிபவிஷின்பம்பணியருளே. 103

அருளுடனேயடுத்தோருக்குநேரிடுமாபத்துக
டிரளாமற்சீரணிதந்துன்கிருபைசெகமறிய
விருள்போல்வருங்கன்மமேகும்படிக்குமிரக்கமுற்றுன்
னருளாமவுள்தஅமிர்தத்தையீயுமழகுறவே. 104



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகருள்வாழுமுன்னன்பர்சொற்பாவிலடங்கியவிப்
புளகமுறுங்கவிநாளிற்றியானிக்கும்புண்ணியர்கள்
வளமமைந்தின்பமருவியுமண்ணினில்வாழ்வுபெற்றே
யிளமையிருமையுமேந்தலெனப்புகழெய்துவரே. 105

எய்தியதொண்டமைந்தோருமிறைஞ்சிடும்புண்ணியரும்
வையகமீதினின்மாதாவைப்போற்றிடுமாதவரு
மையவினையுமகன்றவளன்பினருள்சுரந்து
துய்யபுனிதரெனவெந்தநாளுந்துலங்குவரே. 106

ஆனைமுகனரன்மாலுமயனுமறுமுகனுஞ்
சேனையுறும்வடுகேசனுமையனுஞ்சேர்கறுப்ப
னேனையரும்முத்துமாரியுமேயினிதாயிருந்து
தானையழகுறவேயினிதீகமுன்றண்ணருளே. 107

அருள்வாழியன்பர்கவிவாழியாரணமாகமமும்
பொருள்வாழிபூரணப்பொற்கொடிவாழிபொருந்துதலம்
மருள்நீங்கித்தேறுதல்பெற்றேவிளைவுமகிமைதங்கித்
திரளானசெல்வம்வரவுன்னருட்டிறம்வாழியவே. 108



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முத்துமாரி அம்மை பேரில் ஊஞ்சல்

## காப்பு

*திருமேவுநயமுகனைவென்றுநாளுஞ்*
*செய்யபன்னகமப்பதியிலினிதுவாழுங்*
*கருமேவுமடியர்வினைகடிதின்மீளுங்*
*கவுரிதிருவூஞ்சலெனுங்கவிக்கெந்நாளும்*
*பருமேவுகுடிலைமதிபரந்துநீளும்*
*பராபரன்றனிடப்புறத்தேபதிந்துவாழும்*
*அருமேவுமம்பிகைதன்மகவதாகும்*
*ஐங்கரனே துணையாக ஆடீரூஞ்சல்*

* * *

## நூல்

*மிடல்பொருவுமேருகிரிதனக்கொப்பாக*
*விளங்கியபொற்சிகரமதின்மேலன்பாகக்*
*கடன்மதித்துமங்குலங்கள்படிந்துமாரக்*
*கவின்செய்தகோவையெனவழகுகூரப்*
*படமிகுத்தஉம்பர்காளரங்கள்போலப்*
*பகராரியபலகூடர்கள்பரிந்துகாலத்*
*திடமிகுத்தஅவையாகுமரங்கத்தேறிச்*
*சிவகாமிமாரிஅம்மைஆடீரூஞ்சல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறைவரியபிரபலமாமறைகள்நான்கும்
அணைந்ததூணாகவிட்டங்கலைகளாகப்
பெறவரிய அறுசமையங்கயிறதாகப்
பேசரிய ஆகமங்களணையதாகக்
குறைவரியபுராணங்கள்பலகையாகக்
கோதில்சங்கப்பீடமதின்மேலன்பாக
நிறைவுடனேயெழுந்தருளி அடியார்போற்ற
நீடருளாய்மாரி அம்மை ஆடீரூஞ்சல். 2

கண்ணகன்ஞாலந்துப்பாய்வயிரங்காலாய்க்
கருதுமாணிக்கஉத்ரக்கவின்செய்பாலாய்ப்
பண்ணமைந்தநவவச்ரப்பறளையாக்கிப்
பதுமராகத்திடையேபருமல்தேக்கி
வண்ணமைந்தமரகதநற்றகடுதாவி
வளமிகுந்தமண்டபத்தின்மகிழ்வாய்மேவி
விண்ணமையும்பன்னகமப்பதியை ஆண்டு
மேவுகவுமாரி அம்மை ஆடீரூஞ்சல். 3

துங்கமுறுமதில்படிகசந்திரகாந்தத்
துகளறுநன்மணியாலும்படிவங்காலப்
பங்கமில்லாப்பவளத்தாற்பலகையாக்கிப்
பகர்புட்பராகத்தாற்சதுரந்தேக்கிச்
சங்கமுறவிடையில்நவமணிகளாலுந்
தரித்தசித்ரமண்டபத்திற்றகைமைசால
விங்கிதமாயெழுந்தருளி அடியார்போற்ற
விறைவிகவுமாரி அம்மை ஆடீரூஞ்சல். 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பைதுடிமுரசுபேரிகைகளார்ப்பப்
பலதொனிகாகளமார்ப்பவிரலையார்ப்பக்
கும்பமுனிமறையோர்கள்குழுமியார்ப்பக்
கோதில்துத்திவலம்புரிகள்குமிறியார்ப்பத்
தம்பமுறுதேவதுந்துமிகளார்ப்பச்
சல்லரிகொக்கரைபடகந்தண்ணென்றார்ப்ப
விம்பமதாயெழுந்தருளிஅடியார்போற்ற
மேவுகவுமாரிஅம்மைஆடீரூஞ்சல். 5

இந்திரனும்மாலயனும்வடந்தொட்டாட்ட
இறையவரும்மறையவரும்வடந்தொட்டாட்டச்
சந்திரருஞ்சூரியரும்வடந்தொட்டாட்டத்
தானவரும்வானவரும்வடந்தொட்டாட்டக்
கொந்தலருங்குழன்மாதர்வடந்தொட்டாட்டக்
கோமுனிவர்கணநாதர்வடந்தொட்டாட்டச்
சிந்தைமகிழ்தொண்டர்களும்வடந்தொட்டாட்டத்
தேவிகவுமாரிஅம்மைஆடீரூஞ்சல். 6

மேகநிகர்குழலசையப்பணிகளாட
விளங்கியகுண்டலங்கொப்புமின்னியாட
வேகனையசுடிபக்கம்விளங்கியாட
மேகலைநற்சிறுசெச்சைமிளிரென்றாட
வாகனையபாணியணிகிள்ளையாட
வயங்கியநூபுரச்சிலம்புகலிரென்றாடப்
பாகனையபங்கயப்பொற்பாதமாடப்
பரிந்துறையும்மாரியம்மையாடீரூஞ்சல். 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியரைக்காத்திரட்சித்த அமலையாகி
அருள்மருவப்பன்னகமத்தினிதின்மேவிப்
படியமுகில்திவலைசொரிந்தருள்வதென்னப்
பகரரியபலகருணைவிளைவாய்த்துன்னக்
கொடியெனும்நுண்மருங்கசையச்செய்யபாதக்
கொலுவசையத்தொண்டர்கரங்குவித்துப்போத
வடிவுடனேயிவர்ந்துபலதருமம்வாழ
வலாரிமாமாரி அம்மை ஆடீரூஞ்சல். 8

துங்கமுடனெழுந்தருளி அடியார்தங்கள்
தொல்வினைகள்மாற்றிடவேசோதியாகி
எங்குநிறைசரமசரமனைத்தினுள்ளும்
ஏகாந்தரூபியெனஎழுந்துவிள்ளும்
பங்கமிலாதென்வினையும்நீக்கியாண்டு
பலகருணைவிளைவாகித்தொண்டாய்நின்றோர்க்
கிங்கிதமாய்க்கமலத்திலினிதின்மேவும்
இறைவிகவுமாரியம்மை ஆடீரூஞ்சல். 9

பார்வாழ்கமறைவாழ்கசைவம்வாழ்க
பகரரியபலதொண்டர்நாளும்வாழ்க
ஏர்வாழ்கமங்கையர்கற்பினிதுவாழ்க
வின்பமுடனரசர்செங்கோல்நாளும்வாழ்க
தாரணையபன்னகமத்துள்ளோர்வாழ்க
தருகவிசொன்னோர்கிளைகள்தளிர்த்தேவாழ்க
நேரனைய அம்மைசிவாலயமும்வாழ்க
நிறைமாரியருள்வாழ்க ஆடீரூஞ்சல். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முத்துமாரி அம்மாள் பேரில் எச்சரீக்கை

சீர்மாத்தளைப்பதிமேவியதேவாசிவசேயா
திருமால்திருமருகாகரிமுகவா எச்சரீக்கை
-பரை-மகவா எச்சரிக்கை

அருளால்ஆறுமுகமாகிநல்லன்பர்தொழநண்பாய்ப்
பொருளாகியவுரைதாதைக்குப்பொறித்தாய் எச்சரீக்கை
-தகர்-பரித்தாய் எச்சரிக்கை

* * *

மயிடாசுரன்றனைவென்றுநல்லடியார்தமக்கருள்செய்
தயிலாருறைபதிமேவியஅரியே எச்சரிக்கை
-சவுந்-தரியே எச்சரிக்கை

மருமாமலர்ப்பொழில்சூழ்நிதமருமானகருறையும்
அருவாயுருவொளியாகியதிருவே எச்சரிக்கை
-அரு-ளுருவே எச்சரீக்கை

சிவகாமசுந்தரியாள்திருச்சிவனார்சவுந்தரியாள்
தெளிவானவர்க்கருள்தேக்கிடுந்தேவீ எச்சரிக்கை
-அன்பு-தாநீ எச்சரிக்கை

மறைமாலயற்கரிதாகியமகமாரியென்றுறைவாய்
அறைவார்கழலடிகாட்டியஅன்பே எச்சரிக்கை
-சொரி-நண்பே எச்சரிக்கை

அகலார்வினைதவிர்த்தாள்வதற்கமலாயிஎன்றுலகோர்
தொழமாத்தளைப்பதிமேவியசுடரே எச்சரிக்கை
-அருட்-டொடர்ரே எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராக்கு

சீர்மாத்தளைப்பதியிலுறைந்தாய்பராக்கு
செங்கண்மால்துணைவியென வந்தாய்பராக்கு

பார்மீதிற்பரையாகிவந்தாய்பராக்கு
பகவனிடத்துமையெனப்பண்புறுவாய்பராக்கு

சாலோகம்பரவிமுதலானாய்பராக்கு
சம்புமகேஸ்வரியானதாயேபராக்கு

மூலமறைதேடரியமுதலேபராக்கு
மூவுலகும்நாவலர்கள்முத்தேபராக்கு

சித்தத்தனித்திரசதேனேபராக்கு
சீரான கலைமுதல்வி ஆனாய்பராக்கு

சுந்தரிநிரந்தரிநற்கடரேபராக்கு
சொல்லரியமகமாயி அம்மைபராக்கு

நித்தகவுமாரியெனவந்தாய்பராக்கு
நிருபர்புகழ்கமலாட்சி ஆனாய்பராக்கு

அந்தரியாபுலகர்தொழவந்தாய்பராக்கு
அடியரைக்காத்திரட்சித்தருளாள்வாய்பராக்கு

புங்கவர்கள்புகட்கரையாய்வந்தாய்பராக்கு
புகழுமருளந்தரியென்றானாய்பராக்கு

பூவலர்பன்னகம்மதிக்கவந்தாய்பராக்கு
புகழேழைநினதடியனாக்குபராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments
frome

# SRI ABIRAMI JEWELS

ஸ்ரீ அபிராமி
ஜுவலர்ஸ்

*Jewelers for genuine*
*22ct gold jewells*

**AVERIWATTA, KATUNAYAKE.**
**TEL- 011-2251003, FAX- 011-2259517**

* * * * * * * * * * * *

With Best Compliments
from

# ANUSHAA JEWELLERS



அனுஷா ஜ்வலர்ஸ்

*Jewelers for genuine*
*22ct gold jewells*

**NO-42\B, St. Mary's Road,**
**Ja- Ela.**
**TEL- 011-2249922**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments
frome

# Jothy
# Vidweo & Communicatiuon



**Local & IDD Calls**
**Fax, Photocopy, Laminating,**
**CD Writing**

**Film Rolls, Battery,**
**Greeting Card,**
**Kit- Cell- More**
**Cards Available Hear.**



**NO-551/F, Main Street,**
**Matale.**
**Tel- 066-2233394, Fax- 066-2233395.**
**Mobile- 0777-806984.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org